**சார்பு நீதிமன்றம், பரமத்தி.**
முன்னிலை திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 23–ம் நாள் வியாழக்கிழமை

**இ. ம.எண்.01/2026, 2/2026 இன் அ.வ.எண். 240/2024**

சரஸ்வதி ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

நல்லுசாமி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுக்கள் 15.07.2026–ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எ.ஜெயபால் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.கோபி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## பொதுவான உத்தரவு

இம்மனுக்கள், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தும், அவரது இடது கை பெருவிரல் ரேகையை நீதிமன்றத்தின் முன்பாக பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்தும், மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, அவர் நீதிமன்றத்தின் முன்னிலையில் பதிவு செய்யப்பட்ட எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகை மாதிரிகளையும் மற்றும் கடந்த 07.12.2022– தேதியிட்ட கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையையும் எடுத்துச்சென்று சென்னையில் உள்ள கைரேகை நிபுணரிடம் ஒப்படைத்து பரிசோதனை செய்து, மேற்படி இரண்டு கைரேகைகளில் ஒற்றுமை குறித்து ஒரு

தெளிவான கருத்துரை பெற்று அதை நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யும்படி நீதிமன்ற ஆணையருக்கு தகுந்த உத்தரவு பிறப்பிக்கவேண்டியும், பிரிவு 45 சிபிசி 151 மற்றும் கட்டளை 26, விதி 10(a) மற்றும் பிரிவு 151–ன் கீழ், இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. <u>இரு மனுக்களின் சுருக்கம்,</u>

மனுதாரர், இம்மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக கடனுறுதி சீட்டுப்படி சேர வேண்டிய தொகைக்காக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. கடந்த 07–12–2022 அன்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவருடைய குடும்ப அவசர செலவுகளுக்காக மனுதாரரிடம் ரூ.8,00,000/–ம் ரொக்கமாக கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு, ரூ.100/–க்கு, ரூ.1.00 வீதம் கூடிய வட்டி சேர்த்து அசலும், கூடிய வட்டியும் மனுதாரர் வேண்டும் போது திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதே தேதியில் மேற்படி தொகைக்கு ஒரு கடனுறுதி சீட்டை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்து அதில் கையொப்பமும், கைரேகையும் செய்து கொடுத்துள்ளார். அந்த கடனுறுதி சீட்டின்படி மனுதாரருக்கு சேர வேண்டிய அசல் மற்றும் கூடிய வட்டி தொகைகளை திருப்பி செலுத்தும்படி மனுதாரர் பலமுறை கேட்டும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி நாளது வரை எவ்வித தொகையும் செலுத்தாமல் உள்ளார். அதனால் மேற்படி தொகைகளை வசூல் செய்யக்கோரி மனுதாரர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் 7–வது பத்தியில் ஏதோ, மனுதாரர் பிரதிவாதிக்கு சற்றும் அறிமுகம் இல்லாத நிலையில் எந்தவொரு பணபரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும், மனுதாரர் பெயருக்கு கடனுறுதி சீட்டு எழுதி அதில் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்ததும் இல்லையென்றும், மனுதாரர் போலியான தயார் செய்த கடனுறுதி சீட்டை வைத்துக்கொண்டு கற்பனையான வழக்குமூலத்துடன் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். அதனால் இந்த தாவாவிற்கு ஆதாரவாக மனுதாரர் ஒப்படைத்துள்ள 07–12–2022 தேதியிட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு உண்மையானது என்றும், அது உரிய மறுபயனுக்கு ஏற்பட்டது என்றும், அதிலுள்ள கையொப்பமும், கைரேகையும்

எதிர்மனுதாரர்/ பிரதிவாதியுடையது என நிரூபனம் செய்ய வேண்டியுள்ளது. அதனால் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையையும் மற்றும் இந்த தாவாவுடன் தாக்கல் செய்துள்ள 07–12–2022 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையையும் சென்னையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி கருத்துரை பெற வேண்டியுள்ளது. அதற்காக எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து, நீதிமன்றத்தின் முன்னிலையில் அவரது இடது கை பெருவிரல் ரேகைகளை பதிவு செய்தும் மற்றும் அந்த ரேகைகளின் மாதிரிகளை நீதிமன்ற ஆணையர் மூலம் சென்னையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி 07–12–2022 தேதியிட்ட கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்க நடவடிக்கை எடுத்து மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை அனுமதித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்காவிடில் மனுதாரருக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்பட்டு விடும். மாறாக இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பும் இல்லை. நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, நீதிமன்றத்தின் முன்னிலையில் பதிவு செய்யப்பட்ட எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் கைரேகை மாதிரிகளையும் மற்றும் இந்த தாவாவிற்கு ஆதரவாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள கடந்த 07–12–2022 தேதியிட்ட கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையையும் எடுத்து சென்று சென்னையில் உள்ள கைரேகை நிபுணரிடம் தாக்கல் செய்து, மேற்படி கைரேகைகளின் ஒற்றுமை குறித்து ஒரு தெளிவான கருத்துரை பெற உத்தரவு பிறப்பிக்க வேண்டியுள்ளது. நீதிமன்றம் உத்தரவு செய்யும், நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தையும் மற்றும் கைரேகை நிபுணரின் ஊதியத்தையும் மனுதாரர் நேரடியாக செலுத்த தயாராக உள்ளார். இம்மனுவை அனுமதித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்காவிடில் மனுதாரருக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்பட்டு விடும். மாறாக இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பும் இல்லை. ஆகையால் மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகும்படி உத்தரவு

பிறப்பித்தும், அவரது இடது கை பெருவிரல் ரேகையை நீதிமன்றத்தின் முன்பாக பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்தும், மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, அவர் நீதிமன்றத்தின் முன்னிலையில் பதிவு செய்யப்பட்ட எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகை மாதிரிகளையும் மற்றும் கடந்த 07.12.2022–தேதியிட்ட கடனுறுதி சீட்டில் உள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையையும் எடுத்துச்சென்று சென்னையில் உள்ள கைரேகை நிபுணரிடம் ஒப்படைத்து பரிசோதனை செய்து, மேற்படி இரண்டு கைரேகைகளில் ஒற்றுமை குறித்து ஒரு தெளிவான கருத்துரை பெற்று அதை நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யும்படி நீதிமன்ற ஆணையருக்கு தகுந்த உத்தரவு பிறப்பிக்கவேண்டியும், மனுதாரரால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. இரு மனுக்களிலும், எதிர்மனுதாரர் தரப்பில் உரிய வாய்ப்பளித்தும் எதிருரை தாக்கல் செய்யவில்லை.

4. இம்மனுக்களில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. தற்போது, இம்மனுக்களில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

6. <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், அசல் வழக்கு எதிர்மனுதாரர் கடந்த 07.12.2022–அன்று, தாவா புரோநோட்டு எழுதிக்கொடுத்து, ரூ.8,00,000/– கடனாக மனுதாரரிடம் பெற்றதாகவும், அதை திருப்பித்தரவில்லை என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில், மனுதாரர் பிரதிவாதிக்கு சற்றும் அறிமுகம் இல்லாத நிலையில் எந்தவொரு பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும் மனுதாரர் பெயருக்கு கடனுறுதி சீட்டு எழுதி அதில் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்ததும் இல்லை

என்றும் போலியாக தயார் செய்த கடனுறுதி சீட்டை வைத்துக்கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை எதிர்மனுதாரருடையது என்பதை நிரூபிக்க தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையை, எதிர்மனுதாரரின் கைரேகையுடன் ஒப்பிட்டு கைரேகை நிபுணரின் அறிக்கை பெறவேண்டியது அவசியம் என்றும் அதற்காக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, கைரேகையை பதிவு செய்து தரவேண்டும் என்று உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் உரிய வாய்ப்பளித்தும் எதிருரை தாக்கல்ெ செய்யவில்லை.

8. மனுதாரர் தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. மனுதாரர், அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் பேரில் தாவா அண்டிமாண்டுபடி தொகை வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதி, பிரதிவாதிக்கு சற்றும் அறிமுகம் இல்லாத நிலையில் எந்தவொரு பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும் வாதி பெயருக்கு கடனுறுதி சீட்டு எழுதி அதில் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்ததும் இல்லை என்றும் போலியாக தயார் செய்த கடனுறுதி சீட்டை வைத்துக்கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் தாவா கடனுறுதி சீட்டு குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக மறுத்துள்ளார். எனவே, தாவா புரோநோட்டில் உள்ள கைரேகை எதிர்மனுதாரருடையது என்பதை நிரூபிக்க மனுதாரர் தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையும், எதிர்மனுதாரரின் கைரேகையையும் ஒப்பிட்டு கைரேகை நிபுணரின் அறிக்கை பெற வேண்டும் என்பதற்காக இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பிலும், மனுதாரரின் மேற்படி கோரிக்கைக்கு எதிராக எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

10. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா புரோநோட்டை எதிர்மனுதாரர் எழுதித்தரவில்லை என்று குறிப்பாக மறுத்துள்ளார். எனவே, மனுதாரர் தாவா புரோநோட்டில் உள்ள கைரேகை எதிர்மனுதாரருடையது என்பதை நிரூபிக்க, இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தாவா புரோநோட்டை எழுதித்தரவில்லை என்று மறுத்துள்ள நிலையில், தாவா புரோநோட்டையும், அதிலுள்ள கைரேகையையும், சாட்சிகளின் மூலம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்க முடியும் என்றாலும் மேற்படி சங்கதிகளை முடிவு செய்ய கைரேகை நிபுணரின் அறிக்கை இந்நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர் தாவா புரோநோட்டை மறுத்துள்ள நிலையில், அதிலுள்ள கைரேகை எதிர்மனுதாரருடையதா என்பதை முடிவு செய்ய அவரை, நீதிமன்றத்திற்கு வரவழைத்து அவரின் கைரேகையை பெறவேண்டியது அவசியமாகிறது என்றும் கைரேகை நிபுணரின் அறிக்கையை பெறுவதற்கு ஏதுவாக, நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்கவேண்டியது அவசியம் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. எதிர்மனுதாரரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து அவரின் கைரேகைகளை பெற்று, அந்த கைரேகைகளுடன் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டில் உள்ள கைரேகையை ஒப்பிட்டு, அறிக்கை பெறலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி அறிக்கை பெறுவதற்காக எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி கைரேகை தர உத்தரவிடலாம் என்றும் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, கைரேகை பதிவு செய்து தரவில்லை என்றால், அசல் வழக்கில் தாவா புரோநோட்டின் உண்மைத்தன்மை குறித்து, எதிர்மனுதாரருக்கு எதிராக முடிவு செய்யப்படும் என்றும் இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

12. முடிவாக, ஐ.ஏ.எண்.01/2026, 2/2026–ஆகிய மனுக்கள் அனுமதிக்கப்பட்டு, தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையையும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, அவரிடமிருந்து பெறப்படும் கைரேகையையும் ஒப்பிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய சென்னையில் உள்ள ஆய்வுக்கூடத்தில் ஒப்படைத்து

அறிக்கை பெற ஏதுவாக வழக்கறிஞர் திரு.கே.ஆர்.மணிகண்டன் நியமிக்கப்படுகிறார். மேற்படி ஆவணங்களை நீதிமன்ற ஆணையர் பெற்று, அவைகளை The Superintendent of Police (FP), Tamil Nadu Finger Print Bureau, (SCRB), No.95, Santhome High Road, R.A.Puram, Chennai–600 028 என்ற முகவரியில் ஒப்படைத்து அதற்குரிய கட்டணத்தொகையும் செலுத்தி அவர்கள் வழங்கும் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேலும், நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.10,000/– நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆணையரின் ஊதியத்தையும், ஆய்வுக்குரிய கட்டணத்தையும், மனுதாரரிடம் நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரரின் கைரேகையை தருவதற்காக இந்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் 13.08.2026–அன்று நேரில் ஆஜராகவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில், அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டின் உண்மைத்தன்மை குறித்து, எதிர்மனுதாரருக்கு எதிராக முடிவு செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்கறிஞர் ஆணையர் ஊதியம் செலுத்தவும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி கைரேகை தருவதற்கும் வாய்தா 13.08.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 23.07.2026–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.07.23 14:33:03 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.